# தூதன்

தூதன்-26 | பிப்ரவரி 2017 | தூது-2

## Faith in **God** includes
## Faith in His **Timing**

“நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள்.”
மத்தேயு 21:22



**தென் இந்தியத் திருச்சபை**
**தமிழ் சபை - துபாய்**

Private Circulation only

# தென் இந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 02 |
| ஆயரம்மா மடல் | 05 |
| உதவி போதகர் மடல் | 07 |
| உதவி ஆயரம்மா மடல் | 09 |
| செயலர் மடல் | 11 |
| நீங்கள் கிறிஸ்தவரா... | 13 |
| வானஒளியில் ஞானஒளிக்குள் சவுல் | 14 |
| குதிரை | 16 |
| திருச்சபை ஜெபநாள் | 18 |
| தெரிந்த சத்தியம் தெரியாத உண்மை | 20 |
| வேதவினா போட்டி | 22 |
| Health Tips | 24 |
| Children's Corner | 26 |
| Birthday Celebrants | 28 |
| Wedding Anniversary Celebrants | 30 |
| ஆராதனை பாடல்கள் | 31 |
| The Ark of the Covenant - Book 3 | 35 |



P.O.Box: 8785, Dubai. Ph: 04-2552065, 04-2249249(office), Mob: 050-5533645
Website: www. csitamilparishdubai.com, E-mail: tamilcsi@eim.ae

# சபை போதகர் மடல்

## ஓய்வு நாள் (SABBATH DAY)

“ஓய்வுநாளைத் தூயதாகக் கடைப்பிடிப்பதில் கருத்தாயிரு. ஆறு நாட்கள் நீ உழைத்து உன் அனைத்து வேலையையும் செய்வாய். ஏழாம் நாளோ உன் கடவுளாகிய ஆண்டவருக்கான ஓய்வுநாள்...” (யாத்தி. 20:8-10)

கிறிஸ்துவுக்குள் பிரியமான உடன் விசுவாசிகளே,

ஓய்வுநாளுக்கும் ஆண்டவராயிருக்கிற கிறிஸ்து இயேசுவின் திருப்பெயரில் நல்வாழ்த்துக்கள். கடந்த ஒரு மாதமாய் நம்மைக் காத்து நடத்தி வரும் இறைவனுக்கு நன்றி செலுத்தவும், புதிய மாதத்திலும் நம்மையும், தேசங்களையும், படைப்பையும் தொடர்ந்து வழிநடத்திட மன்றாடவும் சபை கூடுவோம்; இறைத்துதி செய்வோம். ஓய்வின்றி நம்மைக் காக்கும் ஆண்டவரை எண்ணி, ஓய்வுநாள் பற்றிய இறைச்செய்தியைச் சுருக்கமாக இம்மடலில் காண்போம்.

### ஓய்வுநாள் என்றால் என்ன? (What is Sabbath?)

"Sabbath" என்ற எபிரேயச் சொல்லுக்கு நிறுத்துதல் (To cease), தவிர்த்துவிடுதல் (desist), தொடர்ந்து செய்யாமல் விலகி ஒதுங்கியிருத்தல் (abstention) எனப் பல பொருள்கள் உள்ளன. அதன்படி வேலையினின்று சற்று ஓய்வுபெறும் வார்த்தையாக இது சுட்டப்படுகிறது. இதன் அடிப்படையானவர் இறைவனே. அவர் ஆறுநாள் வேலை செய்து ஏழாம் நாளில் ஓய்ந்திருந்ததாகத் திருமறை சுட்டிக்காட்டுகிறது. ஓய்விருந்ததோடு மட்டுமல்ல, அந்நாளை அவர் தூய்மைப்படுத்தி, ஆசீர்வதித்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. God rested on the seventh day and made it holy and blessed (ஆதியாகமம் 2:1-3). மனுக்குலத்தையும் இந்நாளை நன்னாளாய், ஓய்வின் நாளாய் ஆசரிக்கவும், படைப்புடன் இணைந்து கொண்டாடவும், இறைவன் கட்டளையிடுகிறதையும் காணமுடிகிறது (யாத்தி. 20:8-10).

### ஓய்வுநாள் பற்றிய விளக்கம் (Doctrine and Development of the Sabbath)

ஓய்வுநாளைப்பற்றி விளக்குவது அரிதாயினும், நெடிதாயினும், இச்சிறு முயற்சியில் சில புரிதல்களைப் பெற்று இறைபக்தியில் நாம் வளர இறைவன் துணைபுரியட்டும்! பாபிலோனியப் பண்பாட்டில் நிலவின் வளர்பிறை, தேய்பிறைச் சுற்றில் சில நாட்கள் தீய நாட்களாகக் கருதப்பட்டு, வேலை ஏதும் செய்யாத ஓய்வின் நாட்களாகக் கருதப்பட்டு பின்பற்றப்பட்டன. ஆனால் திருமறையில் தீயநாள் என்று ஒன்று இல்லவே இல்லை. அது மூடநம்பிக்கை. ஏழுநாட்களைக் கொண்ட வாரத்தின் முடிவுநாளே ஓய்வுநாளாகவும், புனித நாளாகவும், இறைநினைப்பின் நன்றி நாளாகவும், மங்களமான நாளாகவும் கருதப்படுகிறது.

(Though the Babylonean belief is that some of days of the Lunar cycle are evil days and thus rest and no work recommended, the Bible depicts the Sabbath as a holy, blessed, God made day of remembrance and thanking the divine). “ஷாபத்து” (Shapatth) எனப்படும் அப்பெயரை மாத்திரம் பாபிலோனியப் பண்பாட்டிலிருந்து எபிரேயர்கள் ஒருவேளை பயன்படுத்தியிருப்பினும் இறைவனே உருவாக்கின இறையுணர்வு பெறும் நன்னாளாகவே அதைக் கருதினர்.

ஐந்தாகமத்தில், இந்நாள் மிகவும் மதிக்கப்படத்தக்க, கனப்படுத்தவேண்டிய புனித நாளாகப் பின்பற்றப்பட்டு (யாத்.20:8-11, 23:12, 31:1-17, லேவி.23:3, உபா.5:12-15) கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. இந்நாட்களில் அடிப்படை வேலைகளான உணவு சேகரித்தல், உழுதல், அறுவடை செய்தல், தீ மூட்டுதல், விறகு பொறுக்குதல் (யாத். 16:29-30, எண்.15:32-36) போன்ற எந்த வேலையும் செய்யப்படலாகாது எனக் கண்டிப்புகள் இருந்தன. (Even any basic work is strictly prohibited on the Sabbath). உழைக்கும் மனிதர்களுக்கு மட்டுமல்ல, விலங்கினங்களுக்கும் ஏழாம்நாள் (யாத்.20:10, 23:12, உபா.5:14), மற்றும் நிலத்திற்குக்கூட ஏழாம் ஆண்டு ஓய்வு ஆண்டாகக் கருதப்பட்டது (லேவி.23:24,32, 25:2-6). வீட்டின் பணியாளர்கள் மட்டுமல்ல, தஞ்சம் வேண்டி வருகிற அந்நியர்கள், ஆதரவற்றோர் அனைவருக்குமே ஓய்வு தரப்படவேண்டும் என்பதும் அதில் உள்ளடங்கியுள்ளது. ஏனெனில் ஆதரவற்றோர் சிலநாட்கள் மட்டுமே உழைப்பின்றி உணவு பெறுவர். அவர்கள் தொடர்ந்து நீட்டிக்கவிரும்பினால் உழைக்கவேண்டும் என்பது நாடோடிப் பாரம்பரிய வழக்கமாகும் (It's a day of rest according to pentateuch for laborers, the strangers and animals).

மனிதாபிமான அடிப்படையில் மட்டுமல்ல, ஓய்வுநாள் பக்தியின் புனித நாளாகவும் கருதப்படவேண்டுமெனவும், அந்நாளை ஆண்டவரை நினைத்து, வழிபட்டு, நன்றி பலி ஏறெடுத்து, ஆசாரியனைக் கண்டு, திருமறை கேட்டுணர்ந்து, திருநாளாய்க் கொண்டாடவும் இஸ்ரவேலர் அறிவுறுத்தப்பட்டனர் (2 ராஜா.4:23, ஏசாயா 1:13, ஓசியா 2:11, புலம்பல் 2:6) இந்நாளைப் பரிசுத்த குலைச்சலாக்குகிற எந்தப் பாவத்திற்கும் தேவ கோபாக்கினை உண்டென்றும் (எரே.17:27, நெகேமியா 13:17-18), ஆகவே எந்தவொரு வியாபார முயற்சியும் செய்யப்படலாகாதென்றும் (எரே.17:19-27) எருசலேமின் கதவுகள்கூட திறக்கப்படலாகாதென்றும் எச்சரிப்பு விடுக்கப்பட்டது (நெகே.13:15-22). புனித நேர்ச்சையாக மக்கள் பலிகளைச் செலுத்தி (லேவி.24:8, எண்.28:9-10), பக்தியோடு ஆண்டவரைத் தொழுது (எசே.45:17, 46:4-5), ஓய்வுநாளின் சங்கீதப்பாடலைப்பாடி (சங்கீதம் 92) அரசன் முதல் அடிமை வரை அனைவரும் அனுசரிக்கும்படி அறிவுறுத்தப்பட்டது. சிறையிருப்பின் காலத்தில் ஓய்வுநாளைக் கடைப்பிடித்த அண்ணகர்கள் உட்பட அனைத்து விசுவாசிகளும் உன்னதமான நிலைக்கு உயர்த்தப்படுகின்ற உடன்படிக்கை உறுதியும், செய்யாமல் போகும் குமாரர், குமாரத்திகளுக்கு எச்சரிப்பும் விடுக்கப்படுகிறது (ஏசாயா 56:4-7).

ஓய்வுநாளை அனுசரிக்காமல் மீறுகிறவன் கொல்லப்படுவான் என்றும் எச்சரிக்கப்படுகிறது (யாத்.31:15). (Its also a day of holiness in which everyone should honour, worship the lord with sincere offerings and devoted piety. Those who desecrate will fall to God's wrath). ஆகவே ஓய்வுநாள் பற்றிய கவனம், கரிசனை, கனம் இஸ்ரவேல் மக்களிடையே அதிக தாக்கத்தை ஏற்படுத்தியதன் விளைவாக ஓய்வுநாளில் எந்த வேலையும் செய்யலாகாது என்ற கட்டளையின்படி போர் நடைபெற்ற சூழலில் ஓய்வுநாட்கள் வருமாயின் தம் உயிரே போனாலும், கண்டிப்பாகக் கடைப்பிடித்த குறிப்புகள் உள்ளன. ஆனால் காலப்போக்கில் இது எளியவருக்கும், உழைப்பவருக்கும் அதிக பளுவானதாகவும், சில உயர்தட்டு, ஆதிக்க வர்க்கத்தினரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்ட சுயநல கடைப்பிடித்தலாகவும் மாறிப்போன அவலம் ஏற்பட்டதால், “மிஷ்னா” எழுதப்பட்ட இடைக்கால (Inter Testament) சூழலில் உயிரைக் காப்பாற்றவும், சுகப்படுத்தவும்கூட தடை விதிக்கப்பட்டது. இதையே ஆண்டவர் இயேசு கண்டிக்கிறார். (Sabbath has later developed to a selfish tool for the ruling classes over working class which has made God angry).

### இயேசுவும் ஓய்வுநாளும் (Jesus and the Sabbath)

இயேசு ஆண்டவர் ஓய்வுநாளைப் புனிதமாக ஆசரித்து தேவாலயம் அல்லது தொழுகைக்கூடம் சென்று யூத ரபியாக திருமறைப்போதனை செய்தார் (லூக்கா 4:16, மாற்கு 3:2). ஆனால் பிறரை அடிமைப்படுத்தும் போது அல்லது தேவையிலிருப்போரின், பாதிக்கப்பட்டோரின் விடுதலை அதில் முடக்கப்படும்போது எச்சரித்து, கண்டித்து, ஓய்வுநாளின் உண்மையான மனிதநேயத்தையும், புனிதத்தையும் நினைப்பூட்டுகிறார் (மத்.12:1-8, மாற்கு 3:1-5, லூக்கா 13:10-17, யோவான் 5:1-10). இதைச் சட்டமீறுதலாகக் கண்டவர்கள் அவரைச் சிலுவையிலறைந்து கொன்றாலும், தமது உயிர்ப்பாகிய புதுவாழ்வின் அடிப்படையில் ஓய்வுநாளையே வாரத்தின் முதல் நாளாக தம்மைப் பின்பற்றி, நம்புபவர்க்கு மாற்றிக் காட்டுகிறார் (Jesus has observed the Sabbath devotedly but acted against oppressive sub laws of the Sabbath by resurrecting himself and thus the lives of the affected). அவரைப் பின்பற்றி அவர் தம் அடியவரும் ஓய்வுநாளை ஆசரிப்பினும் (மத்.28:11, மாற்கு 16:1), பின்னர் உயிர்ப்பு நாளை ஓய்வுநாளாக்கி, புனித நாளாக்கிச் சபைகூடி கொண்டாடினர் (அப்.13:14, 16:13, 20:7, வெளி.1:10)

கிறிஸ்துவின் உயிர்ப்பின் வழியே வந்த புதுவாழ்வே, நிலைவாழ்வே அனைவருக்குமான உண்மையான ஓய்வு என்று திருச்சபையில் நம்பப்பட்டு (எபிரெயர் 4:1-16) இன்றும் திருச்சபை அந்நிலை வாழ்வைப் பெற எதிர்நோக்கிக் காத்திருக்கிறது. ஆமென்.

இறைப்பணியில் ஆயர்,
அருள்திரு. சே.கிறிஸ்தோபர் ரத்தினசாமி.
சபை போதகர்.

## கைவிடப்பட்ட கைம்பெண்ணுக்கு கரிசனை
## CARE TO THE DESERTED WIDOW (Luke 7:11-19)

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

புது வாழ்வின் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் புதிய மாத நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். தாவரங்கள் பழைய இலைகளை உதிர்த்து புதிய இலைகளைத் துளிர்க்கும் இந்த பிப்ருவரி மாதத்திலும் ஆண்டவர், நம்முடைய வாழ்விலும் ஒரு புதிய வசந்தத்தை அருளிச் செய்யும்படியாய் வேண்டிக் கொள்கிறேன். நாம் வாழ்கின்ற வாழ்வுக்கு ஒரு அர்த்தம் இருக்க வேண்டும். நம் வாழ்வின் வழியாய் மற்றவர்களும் வாழ்வு பெற வேண்டும்; இயேசுவின் கரிசனையைப் புரிந்து கொள்ள வேண்டும்; ஆண்டவராக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பவைகளின் அடையாளங்களாய் விளங்க இக்கட்டுரையில் நாயீனூரின் விதவை மகனை உயிரோடு எழுப்பிய நிகழ்ச்சியைக் காண்போம்.

### 1. ஆதரவற்ற கைம்பெண் (Desserted Widow)

இஸ்ரவேலில் அநேக விதவைகள் இருந்தாலும் (லூக்கா 4:25) ஒரு சிலருக்கே ஆண்டவரை நேரடியாகச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. கைவிடப்பட்ட எந்த ஒரு நபரையோ, அல்லது கைம்பெண்ணையோ இயேசு கிறிஸ்து சந்திக்கும் போது அவர்களுக்கு இரங்குவதைக் காணமுடிகிறது. விதவைகளுடைய அழுகை மற்றும் ஒடுக்குதல் தேவ சமூகத்தில் எப்போதும் எட்டுகிறது (யாத். 22:22, எரே. 7:6, மத். 23:14). அதுபோல திருச்சபையிலும் விதவையானவளை விசாரிக்கவும் விசாரிப்புக்காரியாக வைத்துக்கொள்ளவும் அப்போஸ்தலர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள் (1 தீமோ.5:3-5, யாக். 1:27). நாயீனூரின் பெயர் தெரியாத இந்த கைம்பெண்ணையும் ஆண்டவர் கைவிடாமல் அவரின் கண்ணீரைத் துடைக்கிறதைக் காண்கிறோம். லூக்காவில் மாத்திரம் சொல்லப்படும் இந்த விதவை தன் ஒரே மகனை இழந்து அநாதரவாய் இருந்தபடியால் அநேகர் அவரோடே கூட துக்கித்து வந்தார்கள் (லூக். 7:12). விதவையாகவும், ஒரே மகனை இழந்த அனாதையாகவும் மிகுந்த வேதனையோடு இருந்த அவருடைய பரிதாப நிலையை பார்க்க முடிகிறது. அவளுடைய எதிர்காலம் இருளடைந்து, வாழ வழியின்றித் தவிக்கும் நிலைமையில் ஆண்டவரின் பார்வை வேத வாக்கியத்தின் நிறைவேறுதலாய் அவர் மீது படுகிறதைப் பார்க்கிறோம். இப்படிப் பட்டவர்களையும் கர்த்தர் கைவிடுகிறதில்லை. மாறாக, மறுவாழ்வு தருகிறார். நாமும் செய்வோமா?

## 2. அரவணைக்கும் ஆண்டவர் (Compassionate Lord)

உலகத்தின் பார்வையில் யூத குலத்தவராகவும், ரபீயாகவும் தெரியும் ஆண்டவர் உலக இரட்சகராக இருக்கிறபடியால் சாதி, பால், இனம், சமூக அந்தஸ்து அல்லது அடையாளம், சுயநலம், தீட்டு, ஒடுக்கப்படுதல், பாவி என்று தள்ளப்படுதல் போன்ற அனைத்தையும் உடைத்து அனைவரையும் வாழ வைக்கிறவர். எப்போதும் நன்மை செய்கிறவராகவே சுற்றித் திரிந்தவர். விதவைகளின் வீடுகளைப் பட்சிக்கிறவர் மத்தியிலே கைம்பெண்களைப் பாராட்டி (ஏழை விதவையின் இரண்டு காசு), அங்கீகரித்து (எலியா, எலிசா போன்ற தீர்க்கதரிசிகளின் அற்புதங்களைச் சுட்டிக்காட்டுதல்), அவர்களுக்கு மறுவாழ்வு தரும்படியாக முனைப்போடு செயல்பட்டவர். அந்த அடிப்படையில் இங்கேயும் இந்த விதவையைக் காணும்போது இயேசுகிறிஸ்து மனதுருகிறவராக, கண்ணீரைத் துடைக்கிறவராக, கிட்ட வருகிறவராக, பாடையைத் தொடுகிறவராக, மரித்தவரை எழுப்புகிறவராகக் காணப்படுகிறார் (லூக்கா 7:13,14). இறந்தவனை எழுப்பும்போது அதிகாரத்தோடும், வல்லமையோடும் அதே நேரத்தில் கரிசனையோடும், ஆறுதலோடும் செயல்படுகிறார். நாமும் செயல்படுவோமா?

## 3. ஆச்சரியப்பட்ட மக்கள் (Astonished People)

இந்த அற்புதத்தின் பிரசித்தம் யூதேயா தேசம் முழுவதும், அதைச்சுற்றியிருக்கிற திசைகள் யாவிலும் பரவியதை லூக்கா விவரிக்கிறார் (7:17) அது மாத்திரமல்ல இதைப் பார்த்த, கேள்விப்பட்ட மக்களின் மனநிலையையும் எடுத்துக்காட்டுகிறார். அந்த விதவையோடு உடன் வந்த நாயீன் ஊர் மக்களும் கிறிஸ்துவைப் பின்பற்றி வந்த மக்களும் பயமும் ஆச்சரியமும் அடைந்தனர். தீர்க்கதரிசியானவர் தம்மிடையே தோன்றியிருக்கிறார் என்றும், கடவுள் தமது ஜனங்களைச் சந்தித்தார் என்றும் சொல்லி மகிமைப்படுத்தினார்கள் (லூக்கா 7:16). சாதாரண மக்கள் சுவிசேஷகர்களாகவும், சாட்சிகளாகவும் மாறினார்கள். அவர்கள் வழியாக இச்செய்தி யோவான்ஸ்நானனுக்கு போய், மேசியா தம்மிடத்திலே வந்திருக்கிறாரா என்று ஆச்சரியப்பட்டுக் கேட்கும் அளவிற்கு மக்களுடைய செய்தி பரப்புதல் இருந்தது. அற்புதங்களையும், அடையாளங்களையும் கண்டு கேட்டிருக்கிற நாமும் அப்படிப்பட்ட சாட்சிகளாய் விளங்குவோமா?

இறந்துபோன மகனை இயேசுவின் மூலம் திரும்பவும் பெற்றுக்கொண்ட அந்த விதவைத் தாய் நிச்சயமாக ஆண்டவருக்கு நன்றி செலுத்தி இருப்பார், இந்த நற்செய்தியை எங்கும் சொல்லியிருப்பார், ஆண்டவருடைய சாட்சியாக தொடர்ந்து வாழ்ந்திருப்பார். நாமும் அவரிடமிருந்து கற்றுக் கொண்டபடி வாழ்வோமாக! ஆமென்!!

இறைப்பணியில்,
திருமதி. தீபா கிறிஸ்தோபர்,
ஆயரம்மா, பெண்கள் ஐக்கிய சங்கத்தலைவி.

## வாக்குத்தத்த செய்தி

"உன் நடுவில் பெரியவராயிருக்கிறார்" ஏசாயா 12:6(b)

சகலவித ஆறுதலின் தேவனாகிய நமது ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். நம்முடைய வாழ்வின் அனேக வேளைகளில் நாம் விரும்பும் நன்மைகளுக்குக் காத்திருக்கும்போதும், நம் கண்ணீரின் ஜெபத்திற்கு ஒத்தாசையும், இரக்கமும் வெளிப்பட தாமதிக்கும்போதும் ஆண்டவர் நம்மை மறந்து போனாரோ என்று நினைத்து சோர்ந்து போகிறோம். ஆனால் தாயின் கருவில் நம்மை உருவாக்கி சொந்த ரத்தத்தினால் நம்மோடு உடன்படிக்கை செய்த ஆண்டவர் சொல்கிறார்.

"உன் நடுவில் பெரியவராயிருக்கிறேன்". இந்த புதிய மாதத்தில் இந்த வாக்குத்தத்த வார்த்தையின் மூலமாக ஆண்டவர் எவ்வாறு தம்மை நம்முடைய வாழ்வில் வெளிப்படுத்தி ஆசீர்வதிக்கப்போகிறார் என்பதைத் தியானிப்போம்.

### 1.அவர் நமது இரட்சிப்பு (He is our Salvation) ஏசாயா 12:2

கிறிஸ்து நம்முடைய இரட்சகராக இருக்கும்போது நாம் பயப்படாமல் நம்பிக்கையுடன் வாழமுடியும். கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர் என்கின்ற அசைக்கமுடியாத அறிக்கை தாவீதிடம் இருந்தது (சங்.27:1). ஆகவே தாவீதின் வாழ்வில் வந்த இன்னல்கள், போராட்டங்கள், தவிப்புகளில் தேவன் இரட்சகராக வெளிப்பட்டு அவனை வழிநடத்தினார்.

நடுவில் பெரியவராய் இருப்பேன் என்று சொன்னவர் நம்முடைய இரட்சிப்பை நம்முடைய வாழ்வில் வெளிப்படுத்துவார். இரட்சிக்கக் கூடாதபடி என் கரம் குறுகிப் போயிற்றோ என்று கேட்கும் ஆண்டவர் நம்மோடு இருக்கிறார். நம் நடுவில் பெரியவராயிருக்கிறார். ஆசீர்வாதமாக நடத்துவார்.

### 2.அவர் நமது கீதமானவர் (He is our Song) ஏசாயா 12:2

கீதசத்தத்தை நம் வாழ்வில் தொனிக்கச் செய்கின்ற ஆண்டவர் துன்பத்தின் பாட்டை, வருத்தத்தின் பாட்டை களிப்பின் பாடலாக மாற்றும் ஆண்டவர் உன் நடுவில் பெரியவராயிருக்கிறார்.

இஸ்ரவேலர் மாபெரும் சமுத்திரத்தைக் கடந்து வந்தனர். பார்வோனும் அவன் சேனையும் சிவந்த சமுத்திரத்தில் மூழ்கடிக்கப்பட்டார்கள். மாபெரும் வெற்றியும் பெற்று இஸ்ரவேலர் கர்த்தரைப் புகழ்ந்து பாடுகிறார்கள் (யாத்.15). கர்த்தர் என் கீதம் என்பதும், கர்த்தர் என் வாழ்வில் தடைகளைத் தகர்த்து வெற்றி அருள்கிறார் என்பதை அறிவிக்கும் அனுபவம் மாத்திரம் அல்ல, அவர் எங்கள் நடுவில் பெரியவராய் யுத்த வீரனாய் வருகிறார் என்பதையும் அறிக்கை செய்யும் அனுபவம் பாடலானது.

ஆண்டவர் நமக்கு ஜெயம் கொடுப்பவராக இருப்பதால் வாழ்வில் குறுக்கிடும் பாவம், சாபம், வியாதிகள், பெலவீனங்கள், ஆசீர்வாதத் தடைகள் எல்லாவற்றிலும் வெற்றி உண்டு. ஏனென்றால் அவர் நம் நடுவில் யெஹோவா நிசியாக பயணிப்பார் (யாத்.17:15).

3.அவர் நமக்கு பெலனானவர் (He is our Strength) ஏசாயா 12:2

தேவன் நம்மோடு இணைந்து கொள்ளும்போது நாம் அவரைச் சார்ந்து கொள்ளும்போது பெலப்படுத்தப்பட்டு, எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலன் உண்டு என்று சொல்லுகிற பவுலின் (பிலி.4:13) அனுபவத்தை நாம் பெற்றுக் கொள்ளலாம்.

நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருந்தால் (யோவான் 15:5) நம்முடைய ஆத்துமா, வாழ்வு, விசுவாசம் பெலப்படுத்தப்பட்டு நிறைவான ஆவியின் கனிகளைத் தந்து கர்த்தருக்குப் பிரியமான ஒரு மகிழ்ச்சியின் வாழ்வு வாழ நம்மை ஆயத்தப்படுத்தும்

சங்கீதம் 46:1-ல் தாவீது சொல்கிறார், தேவன் நமக்கு அடைக்கலமும், பெலனும் ஆனதால் ஒரு சேனைக்குள் பாய்வேன் என்று முழக்கமிடுகிறான்.

இந்த மாதத்தில் ஆண்டவரும் அப்படியே நமக்குப் பெலனாயிருந்து, எல்லாக் காரியங்களையும் செய்ய, திட்டமிட நம்மை தைரியப்படுத்தி ஆசீர்வதிப்பாராக.

அவர் நமக்கு இரட்சிப்பு
அவர் நமக்கு கீதம்
அவர் நமக்கு பெலன்
ஆமென்.

உங்களுக்காக ஜெபிக்கும்,
அருள்திரு. ஆல்வின் பிரைட்.
உதவி போதகர்.

# உதவி ஆயரம்மா மடல்

இயேசுகிறிஸ்துவின் இனிதான நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

### சிந்திக்க ஒரு சிறுகதை

வினிதாவுக்குத் தன்னுடைய அப்பாவைப் பார்க்கும்போது அடையாளமே தெரியவில்லை! கிட்டத்தட்ட 5 ஆண்டுகள் கழித்து அவள், அவரைப் பார்க்கிறாள்! 5 ஆண்டுகளுக்கு முன்னால் அவர்களுடைய வீட்டில் ஏற்பட்ட பெரிய சண்டை அவள் நினைவுக்கு வந்தது. அம்மாவிடம் இனிமேல் குடிப்பதற்குப் பணம் கேட்கமுடியாது என்பதை அறிந்த அப்பா, 5வது படித்துக் கொண்டிருந்த வினிதாவின் கம்மலைத் திருடி, விற்று, அதில் குடித்துவிட்டு வந்தார். அம்மா அவருடைய திருட்டை அவர் வருவதற்குள் கண்டுபிடித்திருந்தார்கள். இனிமேலும் உங்களுக்கு இந்த வீட்டில் இடமில்லை, விட்டால் எங்கள் இருவரையும் அழித்துவிடுவீர்கள் என அம்மா கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்கள்! அன்று சென்ற அவர், கோட் அணிந்து அலுவலகத்துக்குச் செல்லும் ஆபீசரைப் போல் இன்று வந்திருந்தார்.

அவர் வினிதாவிடம், நான் இப்போது குடியை விட்டுவிட்டேன். மறுபடியும் அலுவலகத்தில் சென்று வேலை செய்கிறேன். 2 ஆண்டுகள் எந்தத் தப்பும் இல்லாமல் வேலை செய்த பிறகுதான் உங்களைப் பார்க்கும்படியான தைரியம் வந்தது என கண்கள் கலங்கச் சொன்னார். உன்னுடைய அம்மா கோபமாக இருப்பாள் அல்லவா? நான் அவளைப் பார்த்து மன்னிப்பு கேட்கவேண்டும் எனவும் கூறினார். வினிதா தன் அப்பாவிடம், அம்மா இன்னும் வேலை முடிந்து வரவில்லை, ஆனால் இப்போது வரும் நேரம்தான் என்றாள்.

அம்மா வேலை முடிந்து வீட்டிற்கு வந்தார்கள். அப்பாவைக் கண்டவுடன் அம்மாவின் முகம் கோபத்தில் கடுமையாக மாறியது. அப்பாவின் அப்போதைய நிலையை அவர்கள் கண்டுகொள்ளவே இல்லை. எங்களை நிர்க்கதியாக விட்டுவிட்டு ஓடிப்போனீர்களே? இப்போது எங்களை அழித்துவிட வேண்டும் என்று வந்திருக்கிறீர்களோ என்று அம்மா கடுமையான குரலில் திட்டினார்கள். மகளுக்கு ஏதாவது நகை சேர்த்து வைத்திருப்பாள், அதைத் திருடிவிட்டுப் போகவேண்டும் என்ற எண்ணம்தானே உங்களுக்கு என அம்மா வார்த்தைகளினால் சாடினார்கள்.

அப்பா வினிதாவிடம், நீயாவது என்னை நம்பு. உங்களோடு ஒப்புரவாக வேண்டும் என்ற ஒரே எண்ணம்தான் எனக்கு என்று அவர் தழுதழுத்த குரலில் கூறினார். வினிதாவுக்கு ஒப்புரவாகுதலைப் பற்றிப் பேசிய அப்பாமீது நம்பிக்கை வந்தது. ஆனால் அவளால் என்ன செய்யமுடியும். எனக்காகவும், நமக்காகவும் ஜெபி என சொல்லிவிட்டு அவர் சென்றார். அன்றிரவு வினிதா, “ஆண்டவரே, அப்பா மெய்யாகவே மனம் திரும்பியிருக்கிறார். அதற்காக நன்றி. அம்மாவும் அவரை மன்னித்து ஏற்றுக்கொண்டு, மூவரும் ஒன்றாக வாழ உதவி செய்யும்” என ஊக்கமாக ஜெபித்தாள்.

அன்று வெள்ளிக்கிழமை. அது மூன்றாவது வாரமாக இருந்ததால் குருவானவர் இல்லத்தில் நடைபெற்ற உபவாச ஜெபத்திற்கு அம்மாவும், மகளும் சென்றிருந்தார்கள். அப்போது சாட்சிவேளை வந்தது. அப்பா சாட்சி சொல்ல எழுந்தபோதுதான், அவரும் அந்த ஜெபத்திற்கு வந்தது இருவருக்கும் தெரியவந்தது. அம்மாவுக்கு அவர் முகத்தைப் பார்த்தவுடன் கடுமையான கோபம் வந்தது.

அந்த வேளையில் அப்பா, “நமக்காகச் சிந்தப்பட்ட இயேசுவின் இரத்தம்தான் எனக்குக் குடியின்மீதான வெற்றியைக் கொடுத்தது. குடியினிமித்தம் இரத்தவாந்தி எடுத்த நிலையில், என்மீது இரக்கப்பட்ட ஒருவர் என்னை போதகர் ஐயாவிடம் அழைத்துச் சென்றார். அவர் எனக்காக ஜெபித்தபோது, இயேசு எனக்கு அற்புத சுகம் கொடுத்தார். தீய வழிகளையெல்லாம் விட்டுவிட்டுக் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டேன். ஒரு நல்ல கம்பெனியில் தேவன் எனக்கு வேலையும் கொடுத்தார். கெட்ட நண்பர்கள் மறுபடியும் குடிக்கும்படி தொந்தரவு செய்தபோதும், இயேசுகிறிஸ்து குழியில் விழாதபடி, தம் வல்லமையால், கிருபையால் என்னைக் காத்துக் கொண்டார். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக” என தேவனை மகிமைப்படுத்தினார்கள். அம்மா கண்களில் நீர்வழிய ஒரு ஓரமாக உட்கார்ந்து கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஜெபம் முடிந்தது. இருவரும் ஒன்றாகச் சந்தித்தபோது “தேவன் உங்களைச் சந்தித்து மனம் மாற கிருபை செய்திருக்கிறார், அவருக்கு ஸ்தோத்திரம்!” என்று சொல்லிய அம்மா அவரை மன்னித்து, அன்போடு அப்பாவின் கைகளைப் பிடித்துக் கொண்டார்கள்.

**வேதவாசிப்புப் புகுதி :** 2 கொரிந்தியர் 5:17-19
**மனப்பாட வசனம் :** எபேசியர் 4:32

உங்களுக்காக ஜெபிக்கும்
திருமதி.ஜெனி.ஃபர் ஆல்வின்
உதவி ஆயரம்மா.

# செயலர் மடல்

கர்த்தரின் பெரிதான கிருபையினால் 2017-ன் முதல் மாதத்தைக் கடந்து புதிய மாதத்தைக் காணச்செய்த கர்த்தருக்குக் கோடானுகோடி நன்றிகளை ஏறெடுக்கிறேன்.

New Year Service புதிய Chapel (St.Paul's Chapel)-ல் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. புதிய Chapelஐ நமக்குத் தந்த Chaplaincy-க்கும் மற்றும் அதன் பொறுப்பாளர்களுக்கும் நன்றி கூறுகிறேன்.

6th January Junior Church 1st Term துவங்கியது. இந்த நாளில் Mr.Ranjith Singh அவர்களின் மகள் Mrs.Dafny Theodore, மருமகன் Mr. Theodore அவர்களும் குடும்பமாக பிள்ளைகள் மத்தியில் கர்த்தரின் செய்தியைப் பகிர்ந்துகொண்டார்கள்.

20th January முதல் நமது ஆராதனை புதிய Chapel-ல் சிறப்பாக நடைபெற்றது. Junior Church 9.00am to 10.30am வரை ஆலய ஆராதனை முடிந்தவுடன் St.Paul's Chapel-ல் நடைபெற்றது. New Assessment Scheme துவங்கப்பட்டுள்ளது. இதில் ஏதாவது தெளிவு வேண்டுமானால் ஆயர் அவர்களை அல்லது Junior Church Superintendent அவர்களைக் கேட்டு தெரிந்துகொள்ளுங்கள்.

27-ம் தேதி வெள்ளி அன்று காலை ஆராதனைக்குப் பின்பு நமது சபையின் இன்பச் சுற்றுலாவாக Dhibbah Aqamia Park சென்றுவர கர்த்தர் உதவிசெய்தார். சுமார் 700 பேர் அதில் கலந்து கொண்டார்கள். விளையாட்டுப் போட்டிகளை நடத்திட உதவியாய் இருந்த Mr.T.Rajkumar அவர்கள் குடும்பத்திற்கும், உறுதுணையாக அவர்களோடு பலவிதங்களில் பொறுப்பாக நின்று உதவிசெய்த அனைவருக்கும் நன்றி கூறுகிறேன். மேலும் அங்குள்ள எல்லாவித ஏற்பாடுகளையும் செய்துதந்த Fujairah செயற்குழு உறுப்பினர் Mr.Premline Prince மற்றும் சபையாருக்கும் நன்றிகூறுகிறேன்.

தென் இந்தியத் திருச்சபையின் புதிய Moderator ஆக Rt.Rev.Dr.Thomas K.Ommen, Deputy Moderator ஆக Rt.Rev.Dr.B.D.Prasada Rao, Secretary ஆக Rev.Dr.D.R.Sadananda, Treasurer ஆக Advocate Mr.Robert Bruce ஆகியோர் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். நமது சபையின் சார்பில் அவர்களை வாழ்த்துகிறோம்.

நமது சபையின் முன்னாள் முதல் ஆயர் Rev.A.J.M.Kesari (1991-1994) அவர்கள் கடந்த 24-01-2017 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்கள். அவர்கள் விட்டுச்சென்ற குடும்பத்தினர் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

சிங் ரத்னம், செயலர்.

## NEW MEMBERS LIST

| S. No. | NAME | MEM. NO. | AREA |
|---|---|---|---|
| 1 | Mr. S.David | 2690 | Dubai |
| 2 | Mr. Samuel Raja T. | 2691 | Dubai |
| 3 | Mr. Santha Kumar S. | 2692 | Dubai |
| 4 | Mr. T. Jenittan Samuel | 2693 | Dubai |
| 5 | Mr. Edwin Bright | 2694 | Dubai |
| 6 | Mr. E. Bosco | 2695 | Dubai |
| 7 | Mr. E. Allen Bruce | 2696 | Dubai |

## வேத வகுப்பு ஆராய்ச்சி

முதலாம், மூன்றாம் மற்றும் ஐந்தாம் புதன் கிழமைகளில் இரவு 8:00 மணிக்கு போதகர் இல்லத்தில் நடைபெறும்

## ஆங்கில ஆராதனை

முதல் மற்றும் மூன்றாம் வாரம் வெள்ளிக்கிழமை தோறும் காலை 6:00 மணி முதல் 7:15 மணி வரை திருவிருந்து ஆராதனை ஆங்கிலத்தில் நடைபெறும்.

# நீங்கள் கிறிஸ்தவரா...

பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம், இங்கே பூச்சியும், துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள். மத்தேயு 6:19

கர்ப்பம்...
கருப்பை
மூடியிருக்கும்,
கண்ணாடி...
அழுக்கு
மூடியிருக்கும்,
நெருப்பு...
புகை
மூடியிருக்கும்,
மனிதரின்...
மனம் புத்தி
இவைகளை
ஆசை மூடியிருக்கும்,
ஆசைக்கடலில்
அகப்பட்டு
அருளற்ற நிலை
பெற்ற மனிதருக்கு
ஞானம்... கண்ணுக்கு
புலப்படாது காண்
ஆசையை அடக்கி
அன்பைப் பெருக்கி
ஆடம்பரத்தைச் சுருக்கி
இயேசுவைத்
தேடும்போது
ஞானம் கைகூடும்
ஞானம் வரும்போது
அஞ்ஞானம்
ஓடிவிடும் பார்
மெய்ஞானம்
காண்பாய் பார்
இதை....
உணரும்போது
ஞானம் பொருள்
பற்று அற்றது
என்பதும்
அருள் பற்று
பெற்றது என்பதும்
உண்மையின்
தத்துவம்.
உயிருக்கும்
உடமைக்கும்
உத்தரவாதம்
இல்லாததுதான்
இன்றைய
உலகம்... இங்கே
தில்லுமுல்லு செய்து
சேர்த்து வைப்பதும்
எதுக்காக
திருடனிடம்
கொடுத்து
திண்டாடுவதும்
எதுக்காக...
பொல்லாத காலம்
சொல்லாமல் வரும்
அல்லும் பகலும்
அரும்பாடுபட்டு
கூட்டிவைத்த
பணம்கூட
செல்லாக்காசு
ஆகும்
யாருக்கும்
பயன்படாது
பூட்டிவைக்கும்
களஞ்சியம்
யாவும்
பூச்சியும்
துரும்பும்
அரிக்கும்
இதைக்கண்டு
உணர் நீ மனமே!
பொக்கிஷம் என்று
அலையாதே
நீ தினமே!
ஆகாயத்துப்
பட்சிகளைக்
கவனித்துப் பாருங்கள்
அவைகள்
விதைப்பதுமில்லை
அறுக்கிறதுமில்லை
களஞ்சியங்களில்
சேர்த்து
வைப்பதுமில்லை
மனிதரே... மனிதரே
பைபிள் வசனம்
பாருங்களே!
மனம் மாறுங்களே!
உளமாற
இல்லாதவருக்கு
உதவுங்களே!
பரம் செல்ல
வங்கி வைப்பு நிதி
ஏதப்பா - நாம்
செய்யும்
புண்ணியம் தான்
கூடவே வரும் ஐயா!
வாழ்வின் குறிக்கோள்
இயேசுவின்
திருநாட்டிற்கு
திரும்பிச்
செல்வதில்தான்
உள்ளது என்பதை
உணருங்களே!!
வாழ்வின் அழகு
வாழும்வரை நன்றாய்
கர்த்தரில் கலந்திரு
கவலையை மறந்திரு.

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

# வானஒளியில் ஞானஒளிக்குள் சவுல்

மூர்க்கன்சவுல் எதிர்த்துஎழுந்தான்
இயேசுசபையை அதிரஅடித்தான்
எருசலேம்முடித்து தமஸ்குநடந்தான்
எல்லையோரம் அல்லல்அடைந்தான்

சவுல்வழிமேல்விழி பேரொளிபளிச்
திடீர்தாக்கில் சுருண்டுவிழுந்தான்
" சவுலே..சவுலே.. நீஏன்எனை
துன்பப்படுத்துகிறாய் ? " அசரீரிகேட்டான்

அதிர்ந்துகிடந்தவன் " ஆண்டவரேயார்நீர் ? "
பதறிஉதறிக் கேட்டுவிட்டான்
புதிர்பதில்இதோ " நீதுன்பப்படுத்தும்
இயேசுநானே ! " வியர்த்துவிட்டான்

அதிர்வேட்டாய் " முள்ளில்உதைப்பது
உனக்குக்கடினம் ! " எதிர்எச்சரிக்கை
கதிகலங்கியவன் " ஆண்டவரேநான்
என்னசெய்யச் சித்தமாயிருக்கிறீர் ? "

"எழுந்துபோபட்டணம் முழுவிடைகிடைக்கும்
விளக்கப்படும் வழியில்செயல்படு "
எழுகிறதுசத்தம் எவரையுங்காணோம்
பிரமித்துநின்றார் பின்னுளோர்யாவரும்

எழுந்தசவுல் இமைத்தகண்கள்
இருண்டதுகாட்சி இணைந்தோர்அணைத்து
வழிநடத்தி நுழைந்தார்தமஸ்கு
உள்ளக்கலக்கம் உருண்டதுகாட்சிகள்

பார்வைமீளுமா ? பரிதவிப்பில் !
மூன்றுநாட்கள் தங்கியதமஸ்கில்
சோர்ந்தசவுல் அருந்தாமலும்
புசியாமலும் நொருங்கிக்கிடந்தான்

பார்வைவரந்தரும் அனனியாஅருகில்
இருவருடனும் தரிசனமானார்
நேருக்குநேர்கர்த்தர் சவுலிடம்அனனியா
வருவதாக இயேசுசொன்னார்

புறசாதிகளும் ராசாக்களும்
இஸ்ரேல்புத்திரரும் கர்த்தர்நாமத்தை
அறியப்படுத்த தெரிந்தெடுத்திட்ட
பாத்திரமேசவுல் அனனியாபுரிந்தான்

" சவுல்சகோதரா " சவுல்மேல்கையைவைத்து
யூதாவீட்டில் அனனியாபேச்சு
" சவுல்வழியில் கண்டஇயேசுவே
பார்வையுடன்ஆவிதர அனுப்பினார்"என்பதே

சவுல்கண்ணிலிருந்து விழுந்ததுமீன்செதிள்
பார்வை,ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டான்
சவுல்புசித்துக் குடித்துப்பலப்பட்டான்
தமஸ்குச்சீடருடன் சிலநாள்தங்கினான்

ஆதாரம் :அப்போஸ்தலர் 9:1–19
கவிதை எண் : 195
கவிதை ஆக்கம் : மணிமுத்து

## திருமறைப் பாட ஒழுங்குகள் - பிப்ரவரி 2017

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 03-02-2017 | கிறிஸ்துவே வாழ்வின் வழி | யாத்தி. 15:1-21 | எபேசியர் 5:15-21 | லூக்கா 8:26-39 | 149 |
| 10-02-2017 | திருமணம்: உடன்படிக்கை சாக்கிரமெந்தின் கொண்டாட்டம் | ஆதியா. 2:18-25 | எபிரெயர் 13:1-6 | மத்தேயு 19:1-6 | 127 |
| 17-02-2017 | கரிசனையுள்ள அன்பும் குணமாக்குதலும் | ஏசாயா 42:1-9 | யாக்கோபு 5:13-18 | மாற்கு 7:31-37 | 103:1-14 |
| 24-02-2017 | மனிதனின் வீழ்ச்சியும் ஒழுங்குமீறுதலும் | ஆதியா. 6:1-13 | ரோமர் 7:4-25 | மத்தேயு 7:15-23 | 32 |

# குதிரை

கி.மு. 4000 ஆண்டுகளுக்கு முன்பே மனிதனால் பழக்கப்படுத்தப்பட்ட ஒரு விலங்கு குதிரை. பல வண்ணங்களில் குதிரைகள் உள்ளன. குதிரை அழகானதும், கெம்பீரமானதும், பெலமுள்ளதுமாகும். குதிரைகள் வேகமாக ஓடும் என்பதை எரேமியா 4:13ல் “அவன் குதிரைகள் கழுகுகளிலும் வேகமானவைகள்” என்று பார்க்கிறோம். இதனுடைய மேன்மை என்னவென்றால் இவைகள் இராணுவத்தில் பயன்படுத்தப் படுவதாகும். “பார்வோனின் குதிரைகள் அவனுடைய இரதங்களோடும் குதிரை வீரரோடும் சமுத்திரத்தில் பிரவேசித்தது” (யாத்15:19). மஹா அலெக்ஸாண்டர், செங்கிஸ்கான் போன்றோரும் குதிரைப் படை கொண்டு நாடுகளைப் பிடித்தனர். அவை எக்காளத்தின் தொனிக்கு அஞ்சாமல் பாயும் வீரியத்தைக் கொண்டது என குதிரையைப் பற்றி யோபு 39:19-25 வசனங்களில் காணலாம். குதிரைகளின் பார்வைத் திறன் சிறப்பானது. தரையில் வாழும் பாலூட்டிகளில் குதிரையின் கண்ணே பெரியது. அது நடக்கும்போது பல திசைகளில் பார்த்து நடக்காமல் அதன் பார்வை நேராய், செவ்வையாய் பார்க்க அதன் கண்களில் கலிக்கம் போடுவார்கள். “உன் கண்கள் நேராய் நோக்கக்கடவது. உன் கண்ணிமைகள் உனக்கு முன்னே செவ்வையாய்ப் பார்க்கக்கடவது” (நீதி 4:25). நம் கண்கள் எதையும் தெளிவாகப் பார்க்க வேண்டும். வெளித்தோற்றத்தை வைத்து யாரையும் நல்லவன் கெட்டவன் என நியாயம் தீர்க்கக் கூடாது. அதன் பார்வையில் பரிசுத்தம் காணப்பட வேண்டும். என் கண்களோடே உடன்படிக்கை செய்துகொண்டேன் என யோபு கூறுகிறார். “கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது. உன் கண் தெளிவாயிருந்தால் உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும். உன் கண் கெட்டதாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் கெட்டதாயிருக்கும்” (மத். 6:22,23) அன்பானவர்களே, தினமும் கர்த்தருடைய வசனமாகிய கலிக்கத்தை வாசித்து, தியானித்து, கீழ்படிந்து நாம் நடக்கும் போது கண்களால் வரும் இச்சைகளுக்கு நாம் விலகி கர்த்தருக்குப் பிரியமான வாழ்க்கை வாழ முடியும். “நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்கு கலிக்கம் போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்” (வெளி. 3:18) என ஆவியானவர் லவோதிக்கேயா சபைக்குக் கூறுகிறார். குதிரையின் தொடுதிறனானது, தன் உடம்பில் ஒரு சிறு பூச்சி அமர்ந்தால் கூட அறியுமளவுக்கு நுட்பமானது. கேட்கும் திறனும் அதிகம். இவற்றால் தனது காது மடல்களை 180 டிகிரி வரை திருப்ப முடியும். எனவே தலையை திருப்பாமலே எந்த பக்கம் இருந்து சத்தம் கேட்டாலும் உணர முடியும். அது போல நாமும் சத்துரு நம்மைத் தொடாமல் எப்பொழுதும் விழிப்புடன் அவரின் மெல்லிய சத்தம் நம் காதுகளில் தெளிவாக கேட்க நம்மை தகுதியுள்ளவர்களாக்க வேண்டும்.

மற்றும் குதிரைகள் அதை நடத்துபவர்களுக்குக் கீழ்படிந்து நடக்க அவைகளின் வாயில் கடிவாளம் போட்டு நடத்துவார்கள். "நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம். ஒருவன் சொல் தவறாதவனானால் அவன் பூரணபுருஷனும், தன் சரீரமுழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக்கொள்ளக் கூடியவனுமாயிருக்கிறான். பாருங்கள், குதிரைகள் நமக்குக் கீழ்படியும்படிக்கு அவைகளின் வாய்களில் கடிவாளம் போட்டு, அவைகளுடைய முழுச்சரீரத்தையும் திருப்பி நடத்துகிறோம்... நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம். நம்முடைய அவயங்களில் நாவானது முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது" (யாக். 3:2-6) நம் நாவை கட்டுப்படுத்தவில்லையென்றால் நம் தெய்வ பக்தி வீண் என்று கர்த்தர் சொல்லுகிறார். "என் நாவினால் பாவஞ்செய்யாதபடிக்கு நான் என் வழிகளைக் காத்து, துன்மார்க்கன் எனக்கு முன்பாக இருக்குமட்டும் என் வாயைக் கடிவாளத்தால் அடக்கிவைப்பேன் என்றேன்" (சங். 39:1) என தாவீது கூறுகிறார். நாமும் அனுதினமும் ஆண்டவரிடம் நம் ஜெபத்தில் "கர்த்தாவே, என் வாய்க்குக் காவல் வையும், என் உதடுகளின் வாசலைக் காத்துக் கொள்ளும்" (சங். 141:3) எனக் கேட்டு இந்த உலகத்தில் ஜெயமான வாழ்க்கை வாழ வேண்டும். "குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும் ஜெயமோ கர்த்தரால் வரும்" (நீதி. 21:31). "ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும்"(வெளி.3:5). "பரலோகத்திலுள்ள சேனைகள் வெண்மையும் சுத்தமுமான மெல்லிய வஸ்திரந் தரித்தவர்களாய், வெள்ளைக் குதிரைகளின்மேல் ஏறி, அவருக்குப் பின் சென்றார்கள்"( வெளி. 19:14). ஆம் நாமும் கூட, நம் கர்த்தர் நீதியாய் நியாயந்தீர்க்க வெள்ளைக்குதிரையின் மேல் வரும்போது, அவருக்குப் பின் செல்ல ஆயத்தமாக கர்த்தர் கிருபை செய்வாராக.

கதியின் வழி காணாதவர்கள் கண்ணுக்கரிய கலிக்கம் அது
புதிய எருசலேம்பதிக்குப் போகும் பயணத் துணையும் அது
சத்திய வேதத்தை தினம் தியானி, சகல பேர்க்கும் அதபிமானி
உத்தம ஜீவிய வழிகாட்டும், உயர்வானுலகில் உனைக்கூட்டும்.

இனிதா மோசஸ்

# NEW ARRIVALS

"பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்"

R.Jezreel Victrisia

D/o.Mr.D.R Robin Thangaraja & Mrs.Annie Samuel Raj

17-01-2017

# திருச்சபை ஜெபநாள் 05-02-2017 (ஞாயிறு)

"தேவனே, என் விண்ணப்பத்தைக் கேட்டு,
என் வாயின் வார்த்தைகளுக்குச் செவிகொடும்." சங்கீதம் 54:2

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- இம்மட்டும் நம்மைப் பாதுகாத்து, பராமரித்து இப்புதிய ஆண்டைக் காணச்செய்த தேவனுக்கு நன்றி ஏறெடுப்போம். கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக அவரைத் துதிப்போம்.
- திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறுவோம்.
- Junior Church Teachers Retreat மற்றும் நமது சபையின் இன்பச்சுற்றுலா யாவும் கர்த்தருடைய கிருபையால் சிறப்பாக நடைபெற்றதற்காக அவரைத் துதிப்போம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனரி ஸ்தாபனங்களுக்காக

- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக
- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

## நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் தலைவர்கள் மற்றும் அதிகாரம் வகிப்போர் அனைவருக்காகவும், தேசத்தின் வளத்துக்காகவும், வளர்ச்சிக்காகவும், மனிதநேயமும், மத நல்லிணக்கமும் பெருகவும் ஜெபிப்போம். நல்ல இயற்கைச் சூழ்நிலைகள், மழை வளத்துக்காக ஜெபிப்போம்.
- அரபு ஐக்கியக் குடியரசுக்காக, அதன் தலைவர்களுக்காக, இங்கு வாழும் அனைத்துமக்களின் சமாதானத்துக்காக,
- உலகத் தலைவர்களுக்காக, சமாதானத்துக்காக, உலகில் தேவ ஆளுகைக்காக

## நமது ஜெப மன்றாட்டுகள்

- இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், தேவ ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் ஆகிய தேவ கிருபைக்காக,
- நமது குடும்பங்களின் தேவைகளுக்காக, நமது பிள்ளைகளின் கல்விமுன்னேற்றம், மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக, வளமிகு எதிர் காலத்துக்காக,
- வேலை வாய்ப்புக்காய் காத்திருப்போருக்காக, விசா பிரச்சனைகளில் இருப்போருக்காக, சரீர சுகவீனங்களில் சிகிச்சை பெறுவோருக்காக,
- திருமணத்திற்காக தெய்வ வழிநடத்துதல் நாடுவோருக்காக, குழந்தை பாக்கியத் திற்காக ஜெபிப்போர், மற்றும் பிரசவ கால கட்டத்தில் இருப்போர் அனைவருக்கும் தேவ ஒத்தாசை, கிருபைக்காக, குடும்பங்களை விட்டுத் தனியே பணிக்காக வந்தவர்களுக்காக
